உடனடி வெளியீட்டுக்காக

## ஆக்ஷன்! ப்ராம்ப்ட்டனின் திரை உலகம் மிக வெற்றிகரமாக மாறியுள்ளது

ப்ராம்ப்ட்டன், ON (மே 5, 2022) – ப்ராம்ப்ட்டன் நகரமானது இந்த ஆண்டு திரைத்துறையில் முந்தைய சாதனையை முறிக்கும் ஆண்டாக இருந்தது. 2021 இல், 80 வெவ்வேறு திரைப்படங்கள், தொலைக்காட்சி மற்றும் வர்த்தகப் படங்களுக்கு இடமாக அமைந்தது; மொத்தத்தில் திரைப்படம் பிடிக்கும் செயல்பாட்டுக்கு 553 நாள் காலத்தை உபயோகித்தது; இது 2020 ஆம் ஆண்டிலிருந்து 90 சதவீத அதிகரிப்பை காட்டுகிறது.

திரைத்துறை நிறுவனங்கள், தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களால் உருவாக்கப்பட்ட மற்றும் பின்பற்றப்படும் கடுமையான COVID-19 உடல்நலம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் காரணமாக, 2021 பெருந்தொற்று பரவல் ஆண்டு முழுவதும் தயாரிப்பு பணிகள் தொடர்ந்து செயல்பட முடிந்தது.

ஒரு திரைப்படம் எடுப்பதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது, தயாரிப்பு நிறுவனங்கள் ஃபிலிம் மற்றும் டெலிவிஷன் அலுவலகத்திற்கு ப்ராம்ப்ட்டனில் நேரடியாக செலவழித்த தொகையை குறிப்பிட வேண்டும். 2018 முதல், இந்த மதிப்பீடுகள் கணிசமாக வளர்ந்துள்ளன; கணிக்கப்பட்ட பொருளாதார தாக்கம் 959 சதவீதம் அதிகரித்து $18 மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது; மேலும் நகரத்திற்கு வருவாய் 2021 இல் கிட்டத்தட்ட $400,000 ஆக உயர்ந்துள்ளது, இது 147 சதவீத உயர்ச்சி ஆகும். இந்த வளர்ச்சியானது அமெரிக்காவை தளமாக கொண்ட பெரிய நிறுவனங்கள் கொண்ட ஆர்வத்தின் ஒரு காரணமாக இருந்தது. நெட்ஃபிளிக்ஸ், ஆப்பிள் மற்றும் அமேசான் போன்ற ஸ்டுடியோ நிறுவங்களின் தயாரிப்புகள், அத்துடன் மாற்றப்பட்ட ஸ்டுடியோ இடம் மற்றும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட செட் ஆகியவற்றின் தொடர்ச்சியான பயன்பாடு அகியவையே இந்த வளர்ச்சிக்கு காரணமாகும்.

ப்ராம்ப்ட்டன்-இல் இடம்பெற்ற சமீபத்திய திட்டப்பணிகளில் அடங்குவன:

- அமேஸான் ப்ரைம் இன் புதிய தொடராகிய *ரீச்சர் (Reacher)*
- பாராமவுண்ட் + தொடராகிய *ஸ்டார் ட்ரெக்: ஸ்ட்ரேஞ்ச் நியூ வோர்ல்ட்ஸ் (Star Trek: Strange New Worlds)*
- நெட்ஃப்ளிக்ஸ் – இன் வர்த்தக் திரைப்படம் ஆகிய *13: தி மியூஸிகல் அண்ட் மேன் ஃப்ரம் டோரோன் ட்டோ (13: The Musical* and *Man from Toronto)*

- ஆப்பிள்+ சீரீஸ் ஆகிய , *ஸீ (See)*
- CBC இயின் தொலைக்காட்சி தொடராகிய *கொரோனர் (Coroner)*
- மற்றும் இன்னும் பலவும்!

ப்ராம்ப்ட்டன் நகரம் திரைப்படத் தயாரிப்பிற்கு ஏற்ற இடமாகும். பிராம்ப்டன் நகரம் தொழில்துறைக்கு வரவேற்பளிக்கும்-பாணியிலான சேவைகளை வழங்க உறுதிபூண்டுள்ளது; திரைப்படத்தைப் படம்பிடிப்பதற்கு ஏற்ற இடங்களைக் கண்டறிய அனைத்து அளவிலான தயாரிப்புகளுக்கும் உதவுகிறது;இதில் நகரத்தின் பசுமையான பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள், குடியிருப்பு சுற்றுப்புறங்கள், தொழில்துறை பகுதிகள், நகரின் சமகால கட்டிடங்கள் மற்றும் பாரம்பரிய கட்டிடங்கள் ஆகியவை அடங்கும். பல்வேறு சாலை வழிகள், விருப்பம்போல் காட்சியை அமைக்க உதவும் வசதிகளாக அமைகின்றன. ப்ராம்ப்ட்டன் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி அலுவலகமானது, பீல் பிராந்தியம், பீல் பிராந்திய காவல்துறை, பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பலரையும் உள்ளடக்கிய பிற நகர வளர்ச்சி பங்குதாரர்களுடன் இணைந்து படத் தயாரிப்புக்கான தேவைகளை எளிதாக்குகிறது.

ஒன்ட்டாரியோ க்ரீன் ஸ்க்ரீன் அமைப்பில் ப்ராம்ப்ட்டன் நகரம் உறுப்பினராக உள்ளது; இந்த அமைப்பு அரசாங்கம், தொழில்துறை, தொழிற்சங்கங்கள், கில்டுகள் மற்றும் வர்த்தக சங்கங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு முன்முயற்சியாகும்; இதனால் அவர்களின் தயாரிப்புக்கும் மற்றும் ஸ்டுடியோக்களுக்கும் நிலைத்து நிற்கவல்ல தெரிவுகளை ஏற்படுத்தி சக்தி கூட்டுகிறது. ப்ராம்ப்ட்டன் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி அலுவலகமானது, கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு முகமையுடன் (ACCIDA) நெருக்கமாக இணைந்து, நகரத்தில் திரைப்படத்தின் எதிர்காலத்திற்காக, ப்ராம்ப்ட்டன் சார்ந்த திரைப்பட தயாரிப்பாளர்கள் மற்றும் திரைப்படங்களுக்கான கருத்துக்களை உருவாக்குபவர்களை மேம்படுத்துவதற்கான வழிகளில் செயல்படுகிறது.

ப்ராம்ப்ட்டனில் திரைப்படம் பிடிப்பது பற்றி மேலும் அறிய வருகை தரவும்: brampton.ca/film

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரம்தான் நாம் இருக்க வேண்டிய இடம்! இந்த நகரமானது படைப்புத் தொழில், பசுமை முயற்சிகள் மற்றும் வாய்ப்புகளுக்கான மையமாக உள்ளது. கோவிட்-19 தொற்றுநோய் பரவலின் போது திரைப்படத் தயாரிப்புத் துறையின் இந்த வளர்ச்சி மற்றும் நகரத்தின் மீதான பொருளாதார தாக்கம் விதிவிலக்கான ஒரு விஷயமாகும்; மற்றும் ப்ராம்ப்ட்டனில் எங்களின் இருப்பிடம், வசதிகள் மற்றும் சிறந்த சேவை மற்றும் சலுகைகளுக்கு சான்றளிக்கும் விஷயமாகும்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“எடுக்கப்பட்ட திறமையான நடவடிக்கைகள் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரில் எங்களின் அர்ப்பணிப்புள்ள குழுக்களுக்கு நன்றி; தொற்று பரவலின் போது திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்புத் துறைகளில் எங்களின் வளர்ச்சி, தாவிக்குதிக்கும் அளவில் இருந்தது. ப்ராம்ப்ட்டன் வாய்ப்புகளின் நகரம், மேலும் படைப்புத் துறைக்கான சேரிடமாக சர்வதேச அரங்கில் ப்ராம்ப்ட்டன் அமைந்துவிட்டது என்பது இனி ஒரு ரகசியமே கிடையாது.”

- *ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வாடுகள் 9 & 10; தலைவர், பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி அலுவலகம் வழங்கிய அர்ப்பணிப்பு மற்றும் விதிவிலக்கான சேவைக்கு நன்றி; தொற்றுநோய் பரவலின்போதும் எங்களால் செழித்து நகரத்திற்கு அதிவேக பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவர முடிந்தது. இந்த வெற்றிக்காகவும் மற்றும் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு எனும்போது ப்ராம்ப்ட்டன் தான் அதற்கான இடம் என்று ஏற்படுத்தியமைக்கும் குழுவிற்கு பாராட்டுக்கள்.”

- *பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca